# சமீரும் இயங்கலை நண்பரும்



ஆதரவு

YAYASAN HASANAH

A foundation of Khazanah Nasional

WCC

Women's Centre for Change

# வாசகர்களுக்கான குறிப்பு

இயங்கலையில் நிகழும் சிறார் பாலியல் வன்முறைகள், இணையம் மற்றும் சமூகப் பல்லூடகப் பயன்பாடுகள் மூலம் நிகழலாம். வசப்படுத்துதல், பாலியல் அரட்டை, வற்புறுத்துதல், பாலியல் நோக்கத்திற்காக மிரட்டுதல் ஆகிய வழிகளில் சிறார் பாலியல் வன்முறை நிகழக்கூடும்.

இயங்கலை வழி நிகழும் சிறார் பாலியல் வன்முறை எல்லா வகையான சிறாரையும் பாதிப்புக்குள்ளாக்கும். இதில் மாற்றுத்திறனாளிகளும் அடங்குவர். மாற்றுத்திறன் கொண்ட சிறார், பாலியல் வன்முறைகளுக்கு ஆளாகுவதற்கான வாய்ப்புகள் இன்னும் அதிகம். ஏனெனில் அவர்களிடம் உள்ள குறைபாடுகள் இயலாமை நிலையை உருவாக்குகின்றன. உதாரணத்திற்கு, அறிதிறன் அல்லது தொடர்பாடலில் உள்ள குறைபாடுகள் வன்முறையைப் புரிந்துகொள்வதற்கும், அதனை வெளிப்படுத்துவதற்குமான ஆற்றலைப் பாதிக்கக்கூடும்.

இந்தக் கதை, காது கேளாத சிறுவனுக்கு, இயங்கலை மூலம் ஏற்பட்ட பாலியல் வன்முறை பற்றியதாகும். இதர சிறாரைப் போன்று, காது கேளாத சிறாரும் இணையத்தையும் சமூக ஊடகங்களையும் தொடர்புகொள்வதற்குப் பயன்படுத்துகின்றனர். செய்தி அல்லது குறுஞ்செய்தி போன்றவற்றை அனுப்புவதோடு, காணொளி அழைப்புகளின் பொழுது சைகை மொழியைப் பயன்படுத்தி இவர்கள் தொடர்பு கொள்கின்றனர். ஒதுக்கப்படும் அல்லது தனிமையை உணரும் சிறாரை இந்த இயங்கைலை வன்முறையாளர்கள் எளிதில் குறிவைத்து விடுகின்றனர்.




சமீர் 15 வயதுடைய காது கேளாத சிறுவன். அவன் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புக்கல்வி இடைநிலைப் பள்ளியில் பயில்கிறான்.





சமீர் தன் பள்ளி விடுதியில் தங்கியுள்ளான். அவனுடைய பெற்றோர் மாதத்திற்கு ஒரு முறை அவனை வந்து பார்த்துவிட்டுச் செல்வர்.




சமீர் மிகவும் அமைதியானவன். பள்ளி நேரத்திற்குப் பிறகு, விடுதிக் காப்பாளரின் அனுமதியோடு கைப்பேசி பயன்படுத்த சமீருக்கு அனுமதி உண்டு. கைப்பேசி மூலம் சமீர் தன் பெற்றோருக்குச் செய்தி அனுப்புவான். அதோடு, இணைய விளையாட்டுகளையும் அவன் விளையாடுவான்.




ஒரு நாள், இணையத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது, கேண்டி என்ற ஒரு பெண் அவனோடு தோழமை கொள்வதாக அழைப்பு விடுக்கிறாள். சமீரும் அதனை ஏற்றுக்கொள்கிறான்.




அவனுக்குக் கேண்டியிடமிருந்து உடனடியாகப் பதில் வருகிறது. “ஹாய் சமீர், நீ மிகவும் சிறப்பாக விளையாடுகிறாய். எனக்கும் உன்னைப் போல் விளையாட ஆசை!”




சமீர் ஆச்சரியப்பட்டாலும் அது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு பெண் அவனைக் கவனித்துப் புகழ்கிறாள்.




அடுத்த நாள் மாலை, இயங்கலையில் கேண்டி இருப்பதை சமீர் கவனிக்கிறான். “நீ விளையாடும் விதம் எனக்குப் பிடித்திருக்கிறது. நீ என்னை ஆச்சரியத்திற்கு உள்ளாக்குகிறாய்!” என்று கேண்டி செய்தி அனுப்புகிறாள்.




சமீர் இயங்கலையில் வரும் ஒவ்வொரு முறையும் கேண்டி அவனுக்கு செய்தி அனுப்புவாள். இணைய விளையாட்டுக்கான குறிப்புகளை கேண்டி சமீரிடம் கேட்டறிவாள். ஆரம்பத்தில் சமீர் கூச்சப்பட்டாலும் பிறகு குறிப்புகளைக் கொடுக்க ஆரம்பித்தான்.





அதற்குப் பிறகு, சமீரின் பள்ளிக்கூடம் மற்றும் நண்பர்கள் போன்ற அவனைப் பற்றிய விஷயங்களைக் கேண்டி விசாரிக்க ஆரம்பித்தாள். சமீர், தான் காது கேளாதவன் என்றும், அவனுடைய பள்ளிக்கூடம் மற்றும் தான் தனிமையாக இருப்பது போன்ற விபரங்களையும் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தான்.




“எனக்குப் புரிகிறது. நானும் காது கேளாதவள்தான். நான் உன் தோழியாக இருக்க விரும்புகிறேன். நீ என்னை நம்பலாம்,” என்று கேண்டி செய்தி அனுப்புகிறாள்.




சமீரும் கேண்டியும் கைப்பேசி எண்களைப் பகிர்ந்துகொண்டு ஒவ்வொரு நாளும் செய்தி பரிமாறிக்கொள்கின்றனர்.




ஒரு நாள் மாலை, கேண்டியை சந்திக்க விரும்புவதாகக் கூறி சமீர் செய்தி அனுப்புகிறான். “உன்னுடைய படத்தை எனக்கு அனுப்ப முடியுமா? நான் கொஞ்சம் கூச்ச சுபாவம் உள்ளவள்,” என்று கேண்டி பதில் அனுப்புகிறாள்.




சமீர் தன்னை சுயமாகப் படம் பிடித்து கேண்டிக்கு அனுப்புகிறான். “கடவுளே! நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்!” என்று கேண்டி பதில் அனுப்புகிறாள்.



பதிலுக்குக் கேண்டி தன்னுடைய படத்தை அனுப்புகிறாள். “ஆஹா! கேண்டி மிகவும் அழகாக இருக்கிறாள். நான் அதிர்ஷ்டசாலி,” என்று சமீர் மகிழ்கிறான். சமீரும் கேண்டியும் தங்களுடைய வெவ்வேறு படங்களை மேலும் பரிமாறிக்கொள்கின்றனர்.




சில நாட்களுக்குப் பிறகு, கேண்டி சமீருக்குச் செய்தி அனுப்புகிறாள். “என் தோழனாக நான் உன்னை இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.” கேண்டியின் மேலாடை இல்லாத படம் ஒன்று சமீருக்கு வருகிறது.




சமீர் கூச்சத்திற்கும் குழப்பத்திற்கும் உள்ளாகிறான். சமீரின் மேலாடை இல்லாத படத்தை அனுப்புமாறு கேண்டி கேட்டுக்கொள்கிறாள். சமீர் அதற்குப் பதில் அளிக்கவில்லை.




“சமீர், நீ எனக்கு படம் அனுப்பாவிட்டால் பரவாயில்லை. என்னை முழுமையாக நம்பும் ஒரு தோழனை நான் தேடிக்கொள்கிறேன்,” என்று கேண்டி செய்தி அனுப்புகிறாள். சமீர் தயக்கத்தோடு தன்னை மேலாடை இல்லாமல் படம் பிடித்து அனுப்புகிறான்.




“இதற்கு மேலும் உன்னைச் சந்திக்காமல் என்னால் இருக்க முடியாது!” என்று கூறி இன்னும் நெருக்கமான படங்களை அனுப்புமாறு கூறுகிறாள். கேண்டியை இழந்துவிடுவோமோ என்று சமீருக்குப் பயம் வருகிறது. எனவே கேண்டி கேட்ட படங்களை அனுப்பி வைக்கிறான்.




சில நாட்களுக்குப் பிறகு, அதற்கடுத்த நாள் மாலை 6 மணிக்குப் பள்ளிக்கூட வளாகத்திற்கு வெளியே சந்திக்கலாம் என்று கேண்டி சமீரை அழைக்கிறாள்.





சமீர் கேண்டியை சந்திக்கச் சென்ற இடத்தில், ஒரு ஆடவன் சமீரின் கைப்பேசியை சுட்டிக்காட்டியவாறு நுழைவாயிலுக்கு அருகில் நின்றுகொண்டிருந்தான். சமீர் தன்னுடைய கைப்பேசியை பார்க்கிறான். அதில் “ஹெலோ, நான் கேண்டி,” என்று செய்தி அனுப்பப்பட்டிருந்தது.



சமீர் அதிர்ச்சியடைகிறான். பிறகு அந்த ஆடவன் தன்னுடைய கைப்பேசியை சமீரிடம் காண்பிக்கிறான். அதில் சமீர் கேண்டிக்கு அனுப்பிய நெருக்கமான படங்கள் இருந்தன.




அந்த ஆடவன் பணம் கேட்டு சமீருக்குச் செய்தி அனுப்புகிறான். இல்லாவிடில் அந்தப் படங்களை இணையத்தில் போடப்போவதாக மிரட்டுகிறான். அடுத்த நாள் வந்து பணத்தை வாங்கிக்கொள்வதாகக் கூறி சென்றுவிடுகிறான்.




சமீருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. 'கேண்டி' உண்மையில் ஓர் ஆண் என்றும் தன்னிடம் பணம் கறக்க முயல்கிறான் என்பதையும் அறிந்து சமீர் அதிர்ச்சியடைகிறான்.



சமீர் பதற்றத்திற்கு உள்ளாகிறான். “என் படம் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டால் என்னவாகும்?” என்றெண்ணி பயப்படுகிறான்.




மறுநாள், சமீர் அந்த ஆடவனைச் சந்தித்துப் பணத்தைக் கொடுக்கிறான். அந்த ஆடவன் இன்னும் அதிகமாகப் பணம் கேட்கிறான். அடுத்த திங்கட்கிழமை வருவதாக சமீருக்குச் செய்தி அனுப்புகிறான்.



இது பற்றி யாரிடமாவது கூறினால் படங்களை இணையத்தில் வெளியிட்டுவிடுவதாக அந்த ஆடவன் சமீரை எச்சரிக்கிறான். பயந்து போன சமீர், ஆடவனுக்கு திரும்பப் பணம் கொடுக்க சம்மதிக்கிறான்.



ஒவ்வொரு திங்கட்கிழமை மாலையிலும் சமீர் ஓர் ஆடவனை பள்ளிக்கூட வளாகத்திற்கு வெளியே சந்திப்பதை அங்கள் சோமி கவனிக்கிறார். சமீர் அவனுக்குப் பணம் கொடுப்பதையும் பார்க்கிறார். இதனை அங்கள் சோமி விடுதிக் கண்காணிப்பாளர் திரு அலெக்ஸிடம் அறிவிக்கிறார்.



அடுத்த திங்கட்கிழமை, திரு அலெக்ஸ் பள்ளி நுழைவாயிலில் நின்றுகொண்டு, என்ன நடக்கிறது என்பதைக் கவனிக்கிறார். சமீர் திரும்பி வரும்பொழுது, திரு அலெக்ஸ் அவன் தோளைத் தட்டி, “யார் அந்த ஆள்? ஏன் அவனுக்கு நீ பணம் கொடுக்கிறாய்?” என்று சைகை மொழியில் கேட்கிறார்.



சமீர் அமைதியாக இருக்கிறான். அந்த ஆடவன் தன்னை எச்சரித்துள்ளதை நினைத்துப் பயப்படுகிறான். “நீ பிரச்சனையில் மாட்டிக்கொண்டுள்ளாயா? நான் உனக்கு உதவுகிறேன்,” என்று திரு அலெக்ஸ் சைகைக் குறிப்பு காட்டுகிறார்.




பிறகு சமீர், ‘கேண்டி’ பற்றியும், படங்கள் பரிமாறிக்கொண்டது மற்றும் பணம் கொடுத்தது பற்றியும் திரு அலெக்ஸுக்கு சைகை மூலம் கூறுகிறான். திரு அலெக்ஸ் அதிர்ச்சியடைகிறார்.




“இந்த ஆள் உன்னை ஏமாற்றி, மிரட்டிப் பணம் பறித்துக்கொண்டிருக்கிறான். இது உன் தவறு கிடையாது. நாம் இதனை தடுத்து நிறுத்த வேண்டும்,” என்று சைகையில் கூறுகிறார்.



திரு அலெக்ஸ் உடனடியாக சமீரின் பெற்றோரை அழைக்கிறார். அவர்கள் பள்ளிக்கு வந்தவுடன் திரு அலெக்ஸுடன் காவல்நிலையத்திற்குச் சென்று புகார் கொடுக்கின்றனர்.




அதற்கடுத்த திங்கள், அந்த ஆடவன் சமீரிடம் பணம் பறிக்க வரும்பொழுது, அவன் காவல் அதிகாரிகளால் கைது செய்யப்படுகிறான். அந்த ஆடவனின் கைப்பேசியில் வேறு ஆண் மற்றும் பெண் குழந்தைகளின் படங்களும் இருப்பதைக் காவல் நிலையத்தினர் கண்டெடுக்கின்றனர்.



**இதனை நினைவில் கொள்ளுங்கள்:**
நீங்கள் நிஜத்தில் சந்தித்திராத ஒருவரிடம் உங்கள் சொந்த விபரங்கள், படங்கள் போன்றவற்றை இயங்கலை மூலம் பகிராதீர்கள்.

இயங்கலை நண்பர் உங்களை அசௌகரியப்படுத்தினால், குழப்பத்திற்கு உள்ளாக்கினால் அல்லது மிரட்டினால், நம்பிக்கைக்குரிய ஒரு பெரியவரிடம் நடந்ததைக் கூறுங்கள். இப்படிச் செய்வதன் மூலம் வன்முறையை தடுத்து நிறுத்துவதற்கான உதவிகளை நீங்கள் பெற முடியும்.



உங்களின் நம்பிக்கைக்குரிய நபர் மற்றும் உங்களுக்கு உதவுபவர்களின் பெயர்களைக் குமிழிகளில் நிரப்பவும்.

Women's Centre for Change

பெண்கள் மறுமலர்ச்சி நிலையம் ஆதாய நோக்கற்ற ஓர் அமைப்பாகும். பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இழைக்கப்படும் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவது, பாலினச் சமத்துவம் மற்றும் சமூக நீதியை நிலை உயர்த்துவது இதன் நோக்கமாகும்.

**எழுத்தாக்கம்**
Prema E. Devaraj

**மொழிபெயர்ப்பு**
Suseela Nagappan

**தொகுப்பு**
Hastiny Subramaniam

**கேலிச்சித்திரம்**
Faizati Mohd Ali

**பிரத்தியேக நன்றிகள்**
Lucy Lim Yoke Kwan

**வடிவமைப்பு**
C-Square Sdn Bhd, Penang

**ஆக்கம் மற்றும் வெளியீடு**
Women's Centre for Change

**ஆதரவு**
YAYASAN HASANAH
A foundation of Khazanah Nasional

Copyright © 2023, Women's Centre for Change, Penang

www.wccpenang.org

**Women's Centre for Change**
241, Jalan Burma, 10350 Penang, Malaysia.
+604-228 0342 +6011-3108 4001 wcc@wccpenang.org

**Pusat Perkhidmatan Wanita (PPW)**
13, Lorong Sutera 6, Taman Sutera, 13700 Seberang Jaya, Penang, Malaysia.
+604-398 8340 +6016-439 0698 ppw@wccpenang.org

WCC Penang